1971 ஜூலை 29]

திரு. ஜி. ஆர். எட்மண்ட் : தலைவர் அவர்களே, புதிய பல்கலைக் கழகங்கள் எந்த அடிப்படையில் அமைக்கப்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கூடுமானவரையில் ஒரு கோடி மக்கள் வாழுகின்ற ஒரு பகுதியில் பல்கலைக்கழகம் இருக்கலாம் என்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுதே தனியாக, ரெஸிடென்ஷியல் யூனிவர்ஸிடி என்ற முறையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இருக்கிறது. கல்லூரிகளோடு இணைந்து விளங்கும் பல்கலைக்கழகங்கள் இரண்டு இயங்கி வருகின்றன.

திரு. ஏ. சி. நரசிம்மன் : கோயம்புத்தூரிலும் ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுத்துவதால் மத்திய சர்க்காரிலிருந்தோ அல்லது யூனிவர்ஸிடி கிராண்ட்ஸ் கமிஷனிடமிருந்தோ மானியம் அதிகமாகக் கிடைக்கும் அல்லவா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கட்டடங்கள் அமைப்பதற்கு அவர்களிடமிருந்து மானியம் கிடைக்காது. ஆய்வுக்கூடம் வைப்பதற்கு, நூல் நிலையம் வைப்பதற்கு என்று குறிப்பிட்ட சிறு அளவுதான்—இலட்சக்கணக்கில்தான்—தருகிறார்கள். கோடிக்கணக்கில் அவர்கள் தருவதில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : கோயம்புத்தூர், திருச்சி, பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் பல்கலைக்கழக மையங்கள் அமைக்கப்படுவதுபற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த மையம் கோவையில் இந்த ஆண்டு அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதற்கான முயற்சியில் பல்கலைக்கழகம் ஈடுபட்டு வருகிறது.

Job Oriented Courses

* 528 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether a job oriented syllabus for diploma courses in Civil, Mechanical and Electrical Engineering in the Polytechnics of the State is under the consideration of the Government; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கீழ்க்கண்ட துறைகளில் வேலைச்சார்புடைய பட்டைய படிப்பு 1970–71-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது—

(1) சிற்பக்கலை உதவியாள நிலை.
(2) சர்க்கரை தயாரிப்பு நுட்ப இயல்.
(3) மின் கருவிகள் நுட்ப இயல்.

மேலும் 1971–72-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட துறைகளில் வேலைச் சார்புடைய பட்டைய படிப்பு புகுத்தப்படும்—

(1) விவசாயப் பொறி இயல்.
(2) வெல்டிங் நுட்ப இயல்.

(3) உற்பத்தி.
(4) உருவமைப்பு மற்றும் வரைவுநுட்ப இயல்.
(5) தொழிற்சாலை நுட்ப இயல்.
(6) மின் அணு இயல்.
(7) மருத்துவக் கருவி நுட்ப இயல்—மேல் பட்டையப் படிப்பு.

திருப்பூர் நகராட்சிமன்ற உயர்நிலைப்பள்ளிகள்

* 529 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சி மன்ற நிர்வாகத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என அந்த நகராட்சி மன்றத்திடமிருந்து 1970-ம் ஆண்டில் விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) வந்துள்ளது.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, "இது அரசின் பரிசீலனையில் உள்ளது" என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். திருப்பூர் நகராட்சியைப் பொறுத்த வரையில், நான்கு உயர்நிலைப்பள்ளிகளை அது நிர்வகிக்கவேண்டி உள்ளது. அதனுல் நகராட்சிக்குப் பெரும் செலவு ஏற்படுகிறது. ஆகவே, அந்த உயர்நிலைப்பள்ளிகளை அரசாங்கம் விரைவில் எடுத்துக்கொள்ள முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நகராட்சிப் பள்ளிகளை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற முறையீடுகளைப் பெரும்பான்மையான நகராட்சிகள் செய்து வருகின்றன. முதலில் அவர்களுடைய செலவினத்தில் 50 சத வீதத்தை நகராட்சி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், 50 சத வீதத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் நிலைமை இருந்து வந்தது. பிறகு அவர்கள் நிதிப் பற்ருக்குறை என்று தெரிவித்துக்கொண்ட காரணத்தால், 66-2/3 சதவீதத்தை அரசு ஏற்றுக்கொண்டு, 33-1/3 சத வீதத்தை நகராட்சி ஏற்றுக்கொண்டிருக்கிறது. அரசு தரும் தொகையை மேலும் உயர்த்த வேண்டும் என்று நகராட்சியினர் கேட்டுக்கொண்டிருக்கிறுர்கள். ஆகவே, மூன்று வகையில் ஏதாவதொன்றைச் செய்யலாம் என்று அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. அதாவது, (1) எல்லா நகர மன்றப் பள்ளிகளையும் அரசே ஏற்று நடத்துவது; (2) அரசு கொடுத்துவரும் 66-2/3 சத வீத மானியத்தை 80 சத வீதமாக உயர்த்துவது ; (3) நிதி நிலை போதிய அளவு இல்லாத நகர மன்றங்கள் நடத்துகின்ற உயர்நிலைப் பள்ளிகளை "ஃபேஸ்டு